IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.331/2022

DEPOSITION OF WITNESS P.W.3

| | | |
|---|---|---|
| NAME | : | AGASTIN |
| FATHER'S NAME | : | JOKKAR |
| VILLAGE | : | PERNAMBUT |
| OCCUPATION | : | PRIVATE |
| AGE | : | 24 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 25$^{th}$ day of September 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் பேர்ணாம்பட்டு பகுதியில் குடியிருந்து தனியாரில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் போலிஸ் விசாரணையில் கடந்த 16.07.2022 ஆம் தேதி காலை 10.20 மணிக்கு அமபேத்கர் நகரில் இந்திராணி என்பவரின் வீட்டின் அருகில் ஊர் பொது குழாயிடம் இருந்தபோது தண்ணீர் பிடிக்க வந்த புஷ்பா என்பவரை இந்திராணி மற்றும் வண்ணமயில், பார்வதி ஆகிய மூவரும் அசிங்கமாக திட்டி முகத்தின் மீதும், முதுகின் மீதும் அடித்தார்கள் என்றும், அருகில் இருந்தவர்கள் சண்டையை விலக்கிவிட்டார்கள் என்று கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதவராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை**

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.331/2022

DEPOSITION OF WITNESS P.W.4

| | | |
|---|---|---|
| NAME | : | BHARATH |
| FATHER'S NAME | : | SETTU |
| VILLAGE | : | PERNAMBUT |
| OCCUPATION | : | COOLIE |
| AGE | : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 25th day of September 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் பேர்ணாம்பட்டு பகுதியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. தேதி, மாதம், வருடம் ஞாபகம் இல்லை. சுமார் 1 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் நான் வீட்டில் இருந்போது போலிசார் கேட்டுக்கொண்டதன்பேரில் கையொப்பம் செய்துகொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் போலிஸ் விசாரணையில் கடந்த 27.07.2022 ஆம் தேதி காலை 06.00 மணிக்கு நான் சம்பவ இடத்தில் இருந்போது நானும், மகி என்பவரும் சம்பவ இடத்தில் இருவரும் இருந்தபோது, பேர்ணாம்பட்டு காவல் நிலைய உதவி ஆய்வாளர் அன்றைய தினம் நடந்த சண்டை சம்பந்தமாக புலன் விசாரணை செய்ததாகவும், அங்கு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்ததகாவும், அந்த பார்வை மகசரில் நாங்கள் இருவரும் சம்பவயிடத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு, அதனை போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதவராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை**

**Sd/-R.Saranya.,**
**Judicial Magistrate,**
**Gudiyatham.**